2023 அக்டோபர் 11][திரு. மா. சுப்பிரமணியன்]
ஊதியமான ரூ.18,000/- இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியாக வரையறுக்கப்பட்ட ஊதியமாகும். குறிப்பாக, தமிழ்நாட்டில் மட்டும் ரூ.18,000/- வழங்கப்படுகிறது. பல்வேறு மாநிலங்களில் அந்த ஊதியம் ரூ.14,000/- ஆகவும், ரூ.13,000/- ஆகவும் இருந்து கொண்டிருக்கிறது என்றாலும்கூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.18,000/- ஊதியத்துடன் சேர்த்து ஒவ்வோர் ஆண்டும் 5 சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். நிச்சயமாக, எதிர்காலத்தில் அவர்களுடைய கோரிக்கை செவிமடுக்கப்படும்.

அதோடுமட்டுமல்ல, ஒரு செவிலியருக்கும் பணி பாதிப்பு இல்லை என்கின்ற ஒரு நிலை உருவாக்கப்படும். யார் எப்பொழுது போராட்டம் நடத்தினாலும், போராட்டம் நடத்துகிற இடத்திற்கே நேரடியாகச் சென்று, அவர்களுடைய போராட்டத்திற்கான காரணங்களைக் கேட்டறிந்து, அந்தப் போராட்டங்களைக் கனிவோடு பரிசீலிக்கிற அரசு, இந்த அரசு; கனிவோடு பரிசீலிக்கும் முதல்வர், தாயுள்ளத்தோடு அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுகிற முதல்வர், நம்முடைய மாண்புமிகு முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், எல்லோருமே மகிழ்ச்சியோடு நேற்றைக்கு போராட்டத்திலிருந்து விலகியிருக்கின்றார்கள் என்கின்ற செய்தியை தகவல் கோரியிருக்கிற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம். (குறுக்கீடு)

4. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள். இங்கு வராதீர்கள். அங்கிருந்தே மைக்கில் பேசுங்கள்.

திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று தமிழ்நாட்டு மக்களுக்காக வாழ்ந்து மறைந்த முன்னாள் முதல்வர், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முகாம் அலுவலகமாக இருந்த கொடநாடு பங்களாவில், 24-4-2017 அன்று. . .

[2023 அக்டோபர் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடநாடு குறித்து நீங்கள் பேரவை விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு தந்திருக்கிறீர்கள். இதனை தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

திரு. ஆர். வைத்திலிங்கம்: 5 நிமிடங்கள் பேச வாய்ப்பு கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசுங்கள். இன்று நிறைய அலுவல்கள் இருக்கின்றன. சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

பிற்பகல் 1–10

திரு. ஆர். வைத்திலிங்கம்: 24–4–2017 அன்று கொலை, கொள்ளை நடந்தேறியிருக்கிறது. 24 மணி நேரமும் மின்சாரம் தட்டுப்பாடு இல்லாத அந்த பங்களாவில் மின்சாரம் நிறுத்தப்பட்டிருக்கிறது. CCTV camera off செய்யப்பட்டிருக்கிறது. அங்கே பணியாற்றிய ஓம்பகதூர் என்பவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். கிருஷ்ண பகதூர் என்கிற நேபாளத்துக்காரர் படுகாயங்களுடன் தப்பித்துச் சென்றவர் எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை. முன்னாள் முதலமைச்சர் வீட்டில் இப்படி 6 கொலைகள் நடைபெற்றிருப்பதற்கு அன்றைக்கு ஆட்சியிலிருந்தவர்கள் ஓர் ஆழ்ந்த இரங்கல்கூட தெரிவிக்கவில்லை. (மணியடிக்கப்பெற்றது) I.G. சென்று பார்க்கவில்லை. Superintendent of Police சென்று பார்க்கவில்லை. D.G.P. சென்று பார்க்கவில்லை. அங்கு இறந்தவர்களுக்கு இரங்கல்கூட தெரிவிக்கவில்லை.

தமிழ்நாடு காவல் துறை Scotland Yard–க்கு நிகரானது என்று சொல்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 90 நாட்களில் குற்றவாளிகளைக் கூண்டில் நிறுத்துவோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 900 நாட்கள் ஆகிவிட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, தயவுசெய்து உங்களை கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறோம், தமிழ்நாட்டு ஏழை எளிய இதயங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற, எங்களை ஆளாக்கிய புரட்சித் தலைவி அவர்கள் வாழ்ந்த வீட்டினில் கொலை மற்றும் கொள்ளை நடைபெற்றிருக்கின்றது. இதற்கு முன்னால் ஆட்சியில் இருந்தவர்கள் 2½ வருடங்கள், 3 வருடங்கள் ஆகியும் அதுகுறித்து எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த ஆட்சி வந்து இரண்டரை வருடங்களாகிவிட்டன. இந்த ஆட்சி என்ன

2023 அக்டோபர் 11][திரு. ஆர். வைத்திலிங்கம்]

செய்துகொண்டிருக்கிறது? மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சொல்லாததையும் செய்யக்கூடியவர் என்று இந்த அவையில் கூறினார்கள். சொன்னதை நீங்கள் ஏன் செய்யவில்லை? மேதகு Governor-ஐ சென்று அப்போது சந்தித்தீர்கள். 'கொடநாடு குற்றவாளிகளை கண்டுபிடியுங்கள்' என்று அவர்களிடம் கூறினீர்கள். இன்றைக்கு அந்த இடத்திலிருக்கின்ற நீங்கள் தயவுசெய்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, உண்மைக் குற்றவாளி எத்தகைய உயரமான இடத்திலிருந்தாலும், எங்கள் அம்மா அவர்களின் வீட்டில் நடந்த கொலையில் சம்பந்தப்பட்டவர்களை சொந்தக்காரர்களை கண்டுபிடித்துக் கூண்டில் ஏற்றுங்கள், ஏற்றுங்கள் என்று கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள், கொடநாடு பிரச்சினையைப் பற்றி இங்கே பேசியிருக்கிறார். தற்போது அது சி.பி.சி.ஐ.டி. விசாரணையில் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த சி.பி.சி.ஐ.டி. விசாரணையே நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் நடைபெறத் தொடங்கியிருக்கிறது. சிறப்புப் புலனாய்வுத் துறையின்மூலம் இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விசாரணையின் முன்னேற்றம் மற்றும் தற்போது இருக்கக்கூடிய நிலவரங்களைப் பற்றியெல்லாம் தொடர்புடைய அறிக்கை விரைவிலே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கிறது. எனவே, இந்த வழக்கிலே யார், யார் தவறு செய்திருக்கிறார்கள் என்பது மிக விரைவிலே வெளியே வரப் போகிறது. அவர்கள் எப்படிப்பட்ட இடத்திலே இருந்தாலும், நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள் என்பதை நான் உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

(ஈ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் பேசிய பிறகு வாய்ப்பு தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*